# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040866

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு துறை நாகப்பட்டினம் Year: ஆண்டு 04/2022 FIR No.: மு.த.அ. எண் 04/2022 Date: நாள் 15.10.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 and 7-A of the
   (ii) Act சட்டம்: by the PC (Amendment) Sections பிரிவுகள்: Prevention of Corruption
   (iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்: Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 14.10.2022 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.30 Hrs Time to : நேரம் வரை 22.00 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2022 Time : நேரம் 07.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.10.2022 Time : நேரம் 07.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed written C

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 Km வடக்கு உதவி இயக்குநர்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி (ஊராட்சிகள்) நாகப்பட்டினம் மற்றும் உதவி செயற்பொறியாளர் (RD) நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த அலுவலகம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு D. சிந்தனைவேந்தன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50/2022 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு V. தமிழ்செல்வன், உதவியாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் நாகப்பட்டினம், (2) திரு G. சிவனேசன், கணினி இயக்குநர், AD(Pts), நாகை, (3) திருமதி N. அமலசெல்வராணி, DRCP, AD(Pts) அலுவலகம், நாகப்பட்டினம், (4) திரு S. பெலாஜில்பராஜ், ஊராட்சி செயலர், வடுகச்சேரி ஊராட்சி, (5) திரு P. பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், (6) திரு சூரியமூர்த்தி, ஊராட்சி செயலர், தகட்டூர், (7) திருமதி V. சாந்தி, ஊராட்சி செயலர், செம்பியன்மகாதேவி, (8) திரு J. கென்னடி, அண்ணாபேட்டை, திருவாய்மூர் (Reg. Contractor), (9) திரு A. கலைவாணன், ஆலங்குடி, (ஊராட்சி செயலர்) ...

8. Reasons for delay in reporting by the Complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — வாதியால் தாமதம். —

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 15.10.2022 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.D.முத்துவடிவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.D.முத்துவடிவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 14.10.2022 ஆம் தேதி 14.30 மணி முதல் 22.00 மணி வரை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் மற்றும் நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது 1)திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 35,200/-, 2)திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர் என்பவரிடமிருந்து ரூபாய் 3,030/-,

(தொடர்ச்சி இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 15/X/2022

[signature] 15.10.2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.10.2022 at 10.00 Hrs

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: பதவி ...... No. எண் ........

INSPECTOR OF POLICE
Vigilance and Anti Corruption
Nagapattinam.

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-

3)திருமதி.N.உமாமகேஷ்வரி, ஊராட்சிகளின் மாவட்ட வள மைய தலைவர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 20,160/-, 4)திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர் விழுந்தமாவடி என்பவரிடமிருந்து ரூபாய் 31,850/-, 5)திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம் என்பவரிடமிருந்து ரூபாய் 8,530/-, 6)திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம் என்பவரிடமிருந்து ரூபாய் 6,000/-, 7)திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம் என்பவரிடமிருந்து ரூபாய் 6,960/-, 8)திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி(பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்) என்பவரிடமிருந்து ரூபாய் 4,290/- மற்றும் கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடிதம் நக.எண். 3077/2022/அ2, நாள் 26.08.2022-ன்படியான மதிப்பீட்டறிக்கைகள் கோப்பு, 9)திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(ஊராட்சி கவுன்சிலர்) என்பவரிடமிருந்து ரூபாய் 3,270/- ஆகியவற்றை அவர்களிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 1,19,290/- மற்றும் ஆவணங்கள் இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கண்டபடி மேற்படி நபர்களிடமிருந்து குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 1,19,290/- பணம், திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் மற்றும் நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகத்திலும், நாகப்பட்டினம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், வெளிநபரிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட 9 ஆவணங்கள் மற்றும் 1)திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), நாகப்பட்டினம், 2)திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர், 3)திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP, 4)திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர் விழுந்தமாவடி, 5)திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், 6)திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம், 7)திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம், 8)திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி(பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்), 9)திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(ஊரட்சி கவுன்சிலர்) ஆகியோரிடம் பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். மேற்படி நபர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஆங்கிலத்தில் ஒப்பம்) D.Muthuvadivelu 15X2022 (து.முத்துவடிவேலு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர். 15.10.2022. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் இன்று 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 16.30

மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலுள்ள நாகப்பட்டினம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களை திரு.D.முத்துவடிவேலு, த/பெ.துரைராஜ், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் திரு.D.முத்துவடிவேலு அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கினைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம்/குடிநீர் கட்டணம் தொடர்பாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி செயலர்கள் அது தொடர்பான பதிவேடுகளுடன் ஆஜராக நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டதனை தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலிருந்தும் ஊராட்சி செயலர்கள் நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகத்திற்கு வந்து தங்களது ஊராட்சியின் மின் கட்டணம்/ குடிநீர் கட்டணம் தொடர்பான கணக்குகளை ஆஜர் படுத்தும் பொழுது நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக அலுவலர்கள் அனைத்து ஊராட்சி செயலர்களிடமும் ஒரு குறிப்பிட்ட தொகையினை கையூட்டாக கேட்டுப்பெற்று கொள்வதாகவும் மற்றும் நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற சாலைகள் அமைத்தல், பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்றது தொடர்பான அளவீடு புத்தகத்திலுள்ள அளவீடுகளை உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேரில் சென்று மேலாய்வு செய்து உதவி பொறியாளரால் செய்யப்பட்ட அளவீடுகளை அனுமதித்து பட்டியலை அனுமதிப்பதற்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவி செயற்பொறியாளர் அவர்கள் கையூட்டாக கேட்டுப்பெற்றுக்கொண்டு பட்டியல் தொகைகளுக்கு அனுமதி வழங்குவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு ஆய்வாளர், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் D.முத்துவடிவேலு ஆகிய என்னிடம் தெரிவித்ததன் அடிப்படையில் இன்று 14.10.2022 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 15.30 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 16.10 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சித்துறை அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.20 மணிக்கு வந்து, மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம் மற்றும் நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக கட்டிடத்தில் மேற்படி நாகப்பட்டினம் உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலகமானது தரைதளத்தில் வடக்கு பார்த்தும், நாகப்பட்டினம் உபகோட்டம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகமானது முதல் தளத்தில் கிழக்கு புறம் பார்த்த வாயிலுடன் கூடிய முதல் அறையிலும் அமைந்துள்ளது. மேற்படி நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கட்டிடமானது தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைதளத்தின் இடதுபுறம் உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலர்களின் இரண்டு அறைகளும், அதற்கு அடுத்து உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அவர்களது அறையும், முதல் தளத்தில் நுழைவு வாயிலின் எதிர்புறம் இரும்பு நாற்காலிகளுடன் கூடிய வரவேற்பு அறையும், அதனை அடுத்தார்போல் மேற்கு பக்கம் பொறியியல் பிரிவு அறையும், அதற்கு மேற்கே Engineer Section Computer Room-ம், அதற்கு மேற்கே Executive Engineer(RD) அறையும், பொறியியல் பிரிவு அறைக்கு எதிர்புறம் வடக்கு தெற்காக உள்ள வராண்டாவின் மேல்புறம் முதலில் உதவி செயற்பொறியாளர்(ஊரக வளர்ச்சி) அறையும், அதற்கு வடக்கே நாடாளுமன்ற உறுப்பினர் அறையும் அதற்கு அடுத்தார்போல் பல அறைகளும் அலுவலகங்களும் உள்ளது. மேற்படி நாகப்பட்டினம் உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலகத்தில் **1)**திரு.R.சௌந்திரராஜன், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), நாகப்பட்டினம், **2)**திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர், **3)**திரு.A.சீத்தாராமன், கண்காணிப்பாளர், **4)**திருமதி.R.ரதிராமநாதன், உதவியாளர், **5)**திருமதி.B.எழிழரசி, உதவியாளர், **6)**திரு.G.மாரியப்பன், இளநிலை உதவியாளர், **7)**திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP, **8)**செல்வி.R.ரம்பா, DRCP-கணினி ஆப்ரேட்டர், **9)**திரு.N.சரவணன், தட்டச்சர், **10)**திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர், **11)**திருமதி.G.செந்தாமரைச்செல்வி, அலுவலக உதவியாளர், **12)**திரு.D.மணிகண்டன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு, **13)**திரு.V.கார்த்திகேசன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வேதாரண்யம், **14)**திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர், விழுந்தமாவடி, **15)**திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், **16)**திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம், **17)**திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம், **18)**திரு.R.கணேஷ்மோகன், ஊராட்சி செயலர், சாட்டியக்குடி, **19)**திரு.K.ரெங்கராக, ஊராட்சி செயலர், அவரிக்காடு, **20)**திரு.T.பிரேம்குமார், ஊராட்சி செயலர், கொத்தமங்கலம், **21)**திரு.A.ரெங்கபாசம், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தலைஞாயிறு, **22)**திரு.S.ரமேஷ், ஊராட்சி செயலர், அகரகொத்தனூர், **23)**திரு.M.குமார், ஊராட்சி செயலர், தெற்குபணையூர் ஆகியோரும் நாகப்பட்டினம் ஊரக வளர்ச்சித்துறை உபகோட்ட உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தில் **24)**திருமதி.B.கலைச்செல்வி,

உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம் உபகோட்டம், 25)திருமதி.P.சிவஞானம், இளநிலை வரைதொழில் அலுவலர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், 26)செல்வி.K.கலைச்செல்வி, Unauthorized Computer Operator, உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சிதுறை, நாகப்பட்டினம், 27)திரு.R.ஸ்ரீகணேஷ், உதவி செயற்பொறியாளர்(Road and Bridge), 28)திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி,(தனியார் ஒப்பந்ததாரர்) 29)திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(கவுன்சிலர்) மற்றும் சிலர் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும், தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய தொகை எனத்தெரிய வந்ததால் அந்தத் தொகை சம்மந்தப்பட்ட நபர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த கையூட்டு தொகையானது, நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், அனைத்து ஊராட்சியின் மின் கட்டணம்/ குடிநீர் கட்டணம் தொடர்பான கணக்குகளை ஆஜர் படுத்தும் பொழுது ஊராட்சி செயலர்களிடம் கையூட்டாக பெற்ற பணம் மற்றும் உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையிலும், நாகப்பட்டினம் ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் கீழ் நடைப்பெற்ற சாலைகள் அமைத்தல், பாலங்கள் அமைத்தல் தொடர்பான பணிகளில் அளவீடு புத்தகத்திலுள்ள அளவீடுகளை உதவி செயற்பொறியாளர் அவர்கள் நேரில் சென்று மேலாய்வு செய்து உதவி பொறியாளரால் செய்யப்பட்ட அளவீடுகளை அனுமதித்து பட்டியலை அனுமதிப்பதற்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவி செயற்பொறியாளர் அவர்கள் கையூட்டாக கேட்டு அதனை வழங்குவதற்காக வைத்திருந்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையிலும் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,19,290/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப் பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.R.சௌந்திரராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | 490 | - |
| 2 | திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர் | - | 35,200 |

| | | | |
|---|---|---|---|
| 3 | திரு.A.சீத்தாராமன், கண்காணிப்பாளர் | 490 | - |
| 4 | திருமதி.R.ரதிராமநாதன், உதவியாளர் | 350 | - |
| 5 | திருமதி.B.எழிழரசி, உதவியாளர் | 240 | - |
| 6 | திரு.G.மாரியப்பன், இளநிலை உதவியாளர் | 2,100 | - |
| 7 | திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP | - | 20,160 |
| 8 | செல்வி.R.ரம்யா, கணினி ஆப்ரேட்டர் | 220 | - |
| 9 | திரு.N.சரவணன், தட்டச்சர் | 1,430 | - |
| 10 | திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர் | - | 3,030 |
| 11 | திருமதி.G.செந்தாமரைச்செல்வி, அலுவலக உதவியாளர் | 120 | - |
| 12 | திரு.D.மணிகண்டன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 630 | - |
| 13 | திரு.V.கார்த்திகேசன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 950 | - |
| 14 | திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர், விழுந்தமாவடி | - | 31,850 |
| 15 | திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், | - | 8,530 |
| 16 | திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம், | - | 6,000 |
| 17 | திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம், | - | 6,960 |
| 18 | திரு.R.கணேஷ்மோகன், ஊராட்சி செயலர், சாட்டியக்குடி | 1,770 | - |
| 19 | திரு.K.ரெங்கராசு, ஊராட்சி செயலர், அவரிக்காடு, | 410 | - |
| 20 | திரு.T.பிரேம்குமார், ஊராட்சி செயலர், கொத்தமங்கலம், | 350 | - |
| 21 | திரு.A.ரெங்கபாசம், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 630 | - |
| 22 | திரு.S.ரமேஷ், ஊராட்சி செயலர், அகரகொத்தனூர் | 920 | - |
| 23 | திரு.M.குமார், ஊராட்சி செயலர், தெற்குபனையூர் | 610 | - |
| 24 | திருமதி.B.கலைச்செல்வி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை | 900 | - |

| | | | |
|---|---|---|---|
| 25 | திருமதி.P.சிவஞானம், இளநிலை வரைதொழில் அலுவலர் | 120 | - |
| 26 | செல்வி.K.கலைச்செல்வி, Unauthorized Computer Operator | 90 | - |
| 27 | திரு.R.ஸ்ரீகணேஷ், உதவி செயற்பொறியாளர் (Road and Bridge) | 1,070 | - |
| 28 | திரு.J.முகம்மது அன்சாரி, நீலாப்பாடி,(குனியார் ஒப்பந்ததாரர்) | - | 4290 |
| 29 | திரு.A.சுல்தான் ஆரிப், வடகரை(கவுன்சிலர்) | - | 3,270 |
| மொத்தம் | | 13,590 | 1,19,290 |

திடீர் சோதனையின்போது திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர் என்பவரது பேண்ட் மற்றும் சட்டை பாக்கெட்டிலிருந்து மொத்தம் ரூபாய் 35,200/- யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 35,200/- கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர் என்பவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து மொத்தம் ரூபாய் 3,030/- யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 3,030/- கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP என்பவர் அவரது ஹேண்ட்பேக்கில் வைத்திருந்த ரூபாய் 20,160 யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் இன்றைய தினம் ATM-லிருந்து திரு.தினேஷ் என்பவர் எடுத்து கொடுத்த பணம் கூறினார், அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை மேலும் பணம் எடுத்து கொடுத்த வங்கிக்கணக்கு எண் தினேஷ் பெயரில் இருப்பதாக தெரிவித்ததால், அந்தப்பணம் கையூட்டு தொகையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மேற்படி பணம் ரூபாய் 20,160/- கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர் விழுந்தமாவடி என்பவர் ஆஜர் செய்த ரூபாய் 31,850/-யையும், திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம் என்பவர் ஆஜர் செய்த ரூபாய் 8,530/-யையும், திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம் என்பவர் ஆஜர் செய்த ரூபாய் 6,000/-யையும், திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம் என்பவர் ஆஜர் செய்த ரூபாய் 6,960/-யையும், அவர்கள் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால், மேற்படி தொகைகள் நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையில் அவர்களிடமிருந்து மேற்படி தொகைகள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி,(குனியார் ஒப்பந்ததாரர்)

என்பவரின் சட்டை பையிலிருந்து ரூபாய் 4,290/- க்கும், கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடிதம் நக.எண். 3077/2022/அ2, நாள் 26.08.2022-ன்படியான பழுதடைந்த பள்ளி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கிட வேண்டிய உதவி செயற்பொறியாளர் (ஊ.வ.) நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அசல் மதிப்பீட்டறிக்கைகளின் கோப்பு, திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(கவுன்சிலர்) என்பவரின் சட்டை பையிலிருந்து ரூபாய் 3,270/- க்கும், அவர்கள் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால், மேற்படி தொகைகள் உதவி செயற் பொறியாளருக்கும், அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் அவர்களிடமிருந்து மேற்படி தொகைகள் மற்றும் கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடிதம் நக.எண். 3077/2022/அ2, நாள் 26.08.2022-ன்படியான மதிப்பீட்டறிக்கைகள் கோப்பும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.A.சுல்தான் ஆரிப் அவர்கள் கோட்டூர் பஞ்சாயத்து ஏனாநல்லூர் கிராமத்திற்கு FHTC வேலை சம்மந்தமான M.சுலைமான், வடகரை என்பவருக்குண்டான M.Book-யை வாங்க வந்ததாகவும் தெரிவித்தார். திடீர் சோதனையின்போது திருமதி.B.கலைச்செல்வி, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சிதுறை மற்றும் திருமதி.P.சிவஞானம், இளநிலை வரைதொழில் அலுவலர் ஆகியோர் தங்கள் அலுவலகத்தில் 3 பணியிடம் காலியாக இருப்பதால், செல்வி.K.கலைச்செல்வி என்பவரை Computer Operator பணிக்கு வைத்திருப்பதாகவும், அதற்காக தாங்கள் செல்வி.K.கலைச்செல்விக்கு மாதம் ரூபாய் 5,000/- கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள். திடீர் சோதனையின்போது சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் மற்றும் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,19,290/-, 1)கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடிதம் நக.எண். 3077/2022/அ2, நாள் 26.08.2022-ன்படியான மதிப்பீட்டறிக்கைகள் கோப்பு, 2)நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக வருகை பதிவேடு 2022, 3)நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக உதவி திட்ட நிரலாளர் மற்றும் ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மைய பயிற்றுநர் வருகை பதிவேடு 2022, 4)நாகப்பட்டினம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அவர்களின் கடிதம் ந.க.1062/அ4/2022/உ.இ(ஊ), நாள் 11.10.2022, 5)நாகப்பட்டினம் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலக வருகை பதிவேடு 6)Comparative Statement for Providing Distribution systems with FHTC for Ennanallur in Kottur Panchyat, 7)M.Book.2194/2022-2023, 8)CCI & Final Contract Certificate, 9)Estimate for Providing Distribution systems with FHTC for Ennanallur in Kottur Panchyat ஆகியவை இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் 1)திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), நாகப்பட்டினம், 2)திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர்,

3)திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP, 4)திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர் விழுந்தமாவடி, 5)திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், 6)திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம், 7)திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம், 8)திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி,(தனியார் ஒப்பந்ததாரர்), 9)திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(கவுன்சிலர்) ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 14.10.2022 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் கைப்பற்றுதல் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று **15.10.2022** ஆம் தேதி காலை **07.00** மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு **குற்ற எண்.04/2022**, U/s. 7, 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 15.10.2022
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் மற்றும் 1)திரு.V.தமிழ்செல்வன், உதவியாளர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), நாகப்பட்டினம், 2)திரு.G.தினேஷ், கணினி தட்டச்சர், 3)திருமதி.N.உமாமகேஷ்வரி, DRCP, 4)திரு.S.பெலிக்ஸ்ராஜ், ஊராட்சி செயலர் விழுந்தமாவடி, 5)திரு.P.பாலசுந்தரம், ஊராட்சி செயலர், உத்தமசோழபுரம், 6)திரு.G.வீரபாண்டியன், ஊராட்சி செயலர், கத்தரிபுலம், 7)திருமதி.V.சாந்தி, ஊராட்சி செயலர், செட்டிபுலம், 8)திரு.J.முகம்மது அன்சாரி, த/பெ.ஜவஹர்பாசா, மெயின்ரோடு, நீலாப்பாடி,(பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்), 9)திரு.A.சுல்தான் ஆரிப், த/பெ.அப்துல் மஜீத், பள்ளிவாசல் தெரு, வடகரை(ஊராட்சி கவுன்சிலர்) என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 15.10.2022.
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.
15.10.2022